DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
-------
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ERANIEL.

Calendar } CC . 457/2013
Miscellaneous } STC.
Preliminary Register }
Sessions }

Deposition of witness for { Prosecution PW. 3
{ Respondent
{ Court

**Name** : திரு. கிருஷ்ணன்

Father's Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.11.2022

<u>முதல் விசாரணை</u>:

நான் தெருவுகடையில் வசித்து வருகிறேன். கொத்தனார் வேலை செய்து வருகிறேன். சாட்சி1 உஷா எனது அக்கா. 1வது எதிரி செல்வன் எனது அக்காள் கணவர். 2 வது எதிரி எனது அக்காளின் மாமியார்., 3, 4,5 எதிரிகள் 1வது எதிரியின் சகோதரிகள்.

2 எனது அக்காவுக்கும், 1வது எதிரிக்கும் 2010 ம் வருடத்தில் திருமணம் நடந்ததது. தேதி, மாதம் ஞாபகம் இல்லை. எனது அக்காவுக்கு நாங்கள் 20 பவுன் தங்க நகைகளும், ரூபாய் 1லட்சம் ரொக்கப்பணமும், ரூ.50,000/- மதிப்புள்ள வீட்டு உபயோக பொருட்களும் திருமணத்திற்காக வரதட்சணையாக கொடுத்தோம். திருமணம் முடிந்து எனது அக்கா 1வது எதிரியுடன் செல்லங்கோணத்தில் உள்ள அவரது வீட்டிற்கு சென்றார். அப்போது எனது அக்காவை அவளது மாமியார் மற்றும் நாத்தனார்கள் கொடுமைபடுத்தியுள்ளார்கள். எனது அக்காவிற்கு சிறு வயதில் ஒரு அறுவைசிகிச்சை நடந்தது. அதை வைத்து எனது அக்காவை கேவலமாக பேசியுள்ளார்கள். எனது அக்காவுக்கு வழங்கப்பட்ட வரதட்சணை குறைவு என்று 2,3 எதிரிகள்

பேசியுள்ளனர். திருமணம் முடிந்து 52 நாளில் எனது அக்காவின் கணவரான 1வது எதிரி வெளிநாடு சென்று விட்டார். எனது அக்கா 1வது எதிரி வெளிநாடு சென்றவுடன் மற்ற எதிரிகளுடன் வசித்து வந்துள்ளார். அப்போது எனது அக்காவைஅழகு குறைவு என்று 2 முதல் 5 எதிரிகள் பேசியுள்ளனர்.

3. பின்னர் எனது அக்காவை நாங்கள் எங்கள் வீட்டிற்கு அழைத்து வந்து விட்டோம். பின்னர் 1வது எதிரி வெளிநாட்டில் இருந்து ஊருக்கு வந்திருந்தார். ஏற்கனவே 1வது எதிரி வெளிநாட்டில் இருக்கும்போது எனது அக்காவை சந்தேகப்பட்டு தரக்குறைவாக போனில்பேசி வந்தார். பின்னர் 1வது எதிரி வெளிநாட்டில் இருந்து வந்தவுடன் நாங்கள் எனது அக்காவை 1வது எதிரியின் வீட்டில் கொண்டு விட சென்றோம். வீட்டில் விட்டு விட்டு வந்தபிறகு மறுநாள் எதிரிகள் எனது அக்காவை அசிங்கமாக பேசியுள்ளார்கள்.

4. நானும், எனது அண்ணனும் எதிரிகளின் வீட்டுக்கு சென்று ஏன் சண்டை போடுகிறீர்கள் என்று கேட்டோம். அதற்கு எதிரிகள் எங்களது அக்கா விற்கு ஏற்கனவே குழந்தை பிறந்ததற்கான அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது என்று எங்களை பார்த்து தரக்குறைவாக பேசினார்கள். பின்னர் எதிரிகள் கருங்கல் காவல் நிலையத்தில் எங்களை பற்றி புகார் அளித்தார்கள். போலீசார் எங்களிடம் நீங்கள் காவல் நிலையத்தில் சொல்லிவிட்டு தான் எதிரிகளின் வீட்டிற்கு சென்றிருக்கவேண்டும் என்று சொன்னார்கள். பின்னர் எனது அக்கா குளச்சல் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் எதிரிகள் மீது புகார் அளித்தார்.

5. எனது அக்கா இறந்து தற்போது 10 வருடங்கள் ஆகிறது. 1வது எதிரியும் இறந்து விட்டார் . என்னை இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

என்னை போலீசார் குளச்சல் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். 2012ம் ஆண்டு விசாரித்தார்கள். எனது அக்கா உடலில் கல் இருந்ததற்காக திருவனந்தபுரத்தில் உள்ள மருத்துவமனையில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. திருவனந்தபுரம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் வைத்து அறுவை சிகிச்சை செய்யப்பட்டதற்கான ஆவணங்கள் எதுவும் என்னிடம் இல்லை.

2. போலீசாரிடமும் அறுவை சிகிச்சை செய்யப்பட்டதற்கான ஆவணம் எதையும் நாங்கள் கொடுக்கவில்லை. 1வது எதிரிக்கும், எனது அக்காவுக்கும் திருமணம் நடந்ததற்கான சான்று எதையும் நாங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. திருமணம் வீட்டில் நடந்தது. திருமணத்தை பதிவு செய்யவேண்டும் என்ற விபரம் எனக்கு தெரியாது. நான் பதிவு செய்யவேண்டும் என்ற விபரம் எனக்கு தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

3. எனக்கு 2020 ம் வருடத்தில் குரும்பத்தி அம்மன் கோவிலில் திருமணம் நடந்தது. எனது திருமணத்தை நான் பதிவு செய்துள்ளேன். எனது அக்காவுக்கு 20 பவுன் நகைகள் போட்ட விபரத்தை போலீஸ் விசாரணையில் நான் சொன்னேன் . போலீஸ் விசாரணையில் 14 பவுன் தங்க நகைகள் போடப்பட்டதாக நான் சொல்லியிருந்தால் அது தவறாகும். திருமணம் முடிந்து எனது அக்காவும், 1வது எதிரியும் 52 நாட்கள் கணவன் மனைவியாக வாழ்ந்தார்கள். திருமணம் முடிந்தபிறகு நான், எனது அக்கா எல்லாரும் சேர்ந்து தான் 1வது எதிரியை விமான நிலையத்திற்கு சென்று வெளிநாட்டுக்கு அனுப்பி வைத்தோம் என்றால் சரிதான். எல்லோரும் சேர்ந்து 1வது எதிரியை சந்தோசமாக தான் வெளிநாட்டுக்கு அனுப்பிவைத்தோம் என்றால் சரிதான்.

4. 1வது எதிரி வெளிநாடு சென்றபிறகு எனது அக்கா எட்டு மாதங்கள் எதிரிகளின் வீட்டில் இருந்தார். எனது அக்கா 2வது எதிரி பொன்னாச்சியின் வீட்டில் இருந்தார். அப்போது எனது அக்காவுக்கு 1வது எதிரி மாதந்தோறும் வெளிநாட்டில் இருந்து பணம் அனுப்பி கொண்டிருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் எனது அக்காவின் திருமணத்திற்கு முன்பும், திருமணத்திற்கு பின்பும் கேரளாவில் வேலை பார்த்து வந்தேன். எனது அக்காவை எதிரிகள் கொடுமைப்படுத்திய விபரம் எனக்கு நேரடியாக தெரியாது. எனது அக்கா சொல்லி தான் தெரியும்.

5. எனது அக்காவிற்கு திருமணத்திற்கு முன்பில் இருந்தே வங்கி கணக்கு உண்டு. எனது அக்காவின் வங்கி கணக்கு புத்தகத்தை பார்த்தால் 1வது எதிரி எனது அக்காவிற்கு வெளிநாட்டில் இருந்து எவ்வளவு பணம் அனுப்பி வைத்தார் என்ற விபரம் தெரியும் என்றால்

சரிதான். வங்கி கணக்கு புத்தகத்தை எனது அக்கா போலீசாரிடம் ஒப்படைத்தாரா என்று எனக்கு தெரியாது.

6. போலீஸ் விசாரணையில் 1வது எதிரி வெளிநாட்டில் இருந்து போன் மூலம் எனது அக்காவை திட்டிய விபரத்தை சொன்னேன். போனில் திட்டுவதை பதிவு செய்யும் அளவிற்கு தொழில்நுட்பம் உள்ள போன் எனது அக்காவிடம் கிடையாது. 1வது எதிரி பதிவு செய்யக்கூடிய தொழில்நுட்பம் உள்ள போனை எனது அக்காவிற்கு வாங்கி கொடுத்தார் என்றால் சரியல்ல.

7. எதிரிகளிடம் ரூபாய் ஒருலட்சம் வரதட்சணை பணம் கொடுத்ததற்கான புகைப்படம், வீடியோ ஆதாரங்கள் எதிரிகளிடம் உண்டு. எங்களிடம் இல்லை. நீதிமன்றத்தில் அதற்கான ஆதாரங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் எனக்கு தெரியாது. 3 முதல் 5 எதிரிகளுக்கு எனது அக்காவின் திருமணத்திற்கு முன்பே திருமணம் ஆகிவிட்டது என்றால் சரியல்ல. 3 முதல் 5 எதிரிகள் எனது அக்காவின் திருமணத்திற்கு முன்பு திருமணம் ஆகி அவரவர் கணவர் வீட்டில் வசித்து வந்தார் என்றால் சரியல்ல. 1வது எதிரி வெளிநாடு சென்ற பிறகு 3 முதல் 5 எதிரிகள் எனதுஅக்காவை பார்க்கவோ, உறவு எதுவும் கொள்ளவோ இல்லை என்றால் சரியல்ல.

8. எனது அக்காவை 1வது எதிரிக்கு திருமணம் செய்து கொடுத்த பிறகு முள்ளங்கினாவிளையை சேர்ந்த ஜெயசீலன் என்பவருக்கு திருமணம் செய்து கொடுத்தோம். பின்னர் எனது அக்காவிற்கு குழந்தை பிறந்து 3 வது நாளில் அவர் இறந்து விட்டார். எனது அக்கா எந்த பாதிப்பினால் என்பதற்கான மருத்துவ சான்றிதழ் எனது வீட்டில் உள்ளது. எனது அக்காவின் இறப்பு சான்றிதழை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். இறப்பிற்கான காரணம் குறித்த மருத்துவ சான்றிதழை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். எனது அக்காவிற்கு 1வது எதிரியுடனான திருமணத்திற்கு முன்பு செய்யப்பட்ட அறுவை சிகிச்சைக்கான சான்றிதழையும், இறப்பின் காரணத்திற்கான சான்றிதழையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் எனது அக்காவின் இறப்பிற்கான உண்மையான காரணம் தெரிந்துவிடும் என்பதற்காக நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

9. எனது அக்காவுக்கும், 1வது எதிரிக்கும் நடந்த திருமணம் எனது அக்கா

இறக்கும்வரை ரத்து செய்யப்படவில்லை என்றால் சரிதான். எனது அக்காவின் முதல் திருமணம் ரத்து செய்யப்படவில்லை என்ற விபரத்தை 2வது கணவர் ஜெயசீலனிடம் சொன்னோம். எனது அக்காவின் இரண்டாவது திருமணமும் பதிவு செய்யப்படவில்லை. போலீஸ் விசாரணையில் எனது அக்காவின் முதல் திருமணம் ரத்துசெய்யப்படாமல் இரண்டாவது திருமணம் செய்துள்ள விபரத்தை சொல்லியுள்ளோம். நான் வழக்கிற்காக வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

10. எனது அக்கா 2வது கணவருடன் எனது அக்கா இறக்கும்வரை 2 வருடங்கள் வாழ்ந்தார். 1வது எதிரியின் இறுதி சடங்கில் எங்கள் குடும்பத்தினர் கலந்து கொள்ளவில்லை. 1வது எதிரி கருங்கல் காவல் நிலையத்தில் எனது அக்காவை அவருடன் சேர்த்து வைக்கவேண்டும் என்று புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. எனது அம்மா எனது அக்காவை கொடுமைப்படுத்தியது சம்பந்தமாக கருங்கல் காவல் நிலையத்தில் புகார் அளிக்கவில்லை. 1வது எதிரி வெளிநாட்டில் இருந்து வந்தபிறகு அவருடன் எனது அக்காவை சேர்த்து வைக்கவேண்டும் என்று 1வது எதிரி எங்கள் மீது கருங்கல் காவல் நிலையத்தில் புகார் அளித்தார் என்றால் சரியல்ல.

11. 1வது எதிரி வெளிநாட்டில் இருக்கும்போதே எனதுஅக்காவிற்கும், ஜெயசீலன் என்பவருக்கும் திருமணம் ஆகிவிட்டதால் நாங்கள் எனது அக்காவை 1வது எதிரியுடன் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. அதிலிருந்து தப்பிப்பதற்காக தான் நாங்கள் எதிரிகள் மீது வரதட்சணை கொடுமை என்று பொய் புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. எனது அக்கா அளித்த புகார் மனுவில் வழக்கு பதிவு செய்ய முகாந்திரம் இல்லாததால் குளச்சல் அனைத்து மகளிர் போலீசார் வழக்கு பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. அதனால் எனது அக்கா வழக்கறிஞர் மூலம் நீதிமன்றத்தை நாடி நீதிமன்ற உத்தரவு பெற்று எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

12. எனது அக்கா எவ்வளவு நகை, பணம் கொண்டு வந்தார்கள் என்றும் 1வது எதிரி எனது அக்காவிற்கு எவ்வளவு பணம் அனுப்பி வைத்தார் என்பதும் எனது அக்காவிற்கும், 1வது எதிரிக்கும் மட்டுமே தெரியும் என்றாலும் மற்ற எதிரிகளுக்கு தெரியாது என்றாலும் சரியல்ல. அதேபோல் எனது அக்கா மற்றும் 1வது எதிரிக்கு இடையே இருந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்ற

எதிரிகளுக்கு தெரியாது என்றால் சரியல்ல. எதிரிகளை கஷ்ட நஷ்ட படுத்தவேண்டும் என்ற காரணத்தினாலும், எதிரிகளிடம் இருந்து பணம் பறிக்கவேண்டும் என்ற எண்ணத்திலும் எதிரிகள் மீது நாங்கள் பொய்யாக புகார் அளித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது அக்காவிற்கு 1வது எதிரியுடன் திருமணம் நடக்கும் முன்பே ஜெயசீலன் என்பவருடன் பழக்கம் இருந்தது என்றால் சரியல்ல. அந்த குற்றச்சாட்டில் இருந்து தப்பிப்பதற்காக எதிரிகள் மீது நாங்கள் பொய்யாக புகார் அளித்துள்ளோம் என்றால் சரியல்ல.